உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி ௧௮] ரௌத்திரி-ஸு ஆடிமீ [பகுதி ௯.

Vol. XVIII. July—August. 1920. No. 9.


## ஏதுப்போலிவிளக்கம்.

ஏதுப்போலிவிஷயமாகச் சென்ற பங்குனிமாதச் செந்தமிழ்ப் பகுதியில், சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத்—அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் காட்டியன பலவும் பொருத்தமுள்ளனவேயாயினும், அவற்றுள், பெயர்மாத்திரங் கூறி விடப்பட்டவற்றை யுதாரணங்காட்டி விளக்கியும், தாம் விளக்கியவற்றிற் செய்யவேண்டிய திருத்தங்களைக் காட்டியும், ஒரு தெளிவுரையெழுதி இச்செந்தமிழ்ப் பகுதியில் வெளியிடவேண்டுமென்று அவர்கள் விரும்பியதற்கிணங்கி இஃதெழுதப் பட்டிருக்கிறது.

விருத்தவகை இரண்டற்கும் பெயர்கூறியவிடத்து முதலதற்கு, "பக்கவிபக்கவியாபகவிருத்தம்" எனவும், இரண்டாவதற்கு, "பக்கவிபக்கைகதேசவிருத்தம்" எனவும் எழுதப்பட்டன. அவற்றை முறையே (க) "பக்கவிபக்கவியாபகம்" எனவும், (உ) "பக்கவிபக்கைகதேசவிருத்தி" எனவும் திருத்திவழங்குதல் சாலும்.

1. முதலாவ்தன் இலக்கணவாக்கியத்தில், "சபக்கத்தில் வியாபகமாகாத ஏது" என்றெழுதியிருக்கும் பாகத்தை "சபக்கத்தில் இல்லாத ஏது" என்று திருத்திக்கொள்ளவேண்டும். அல்லாக்கால் "வியாபகமாகாத ஏது" என்பதற்கு வியாப்பியமாயிருக்கும் ஏது என்ற பொருளுமுடையதாய் அநைகாந்திக விசேடத்தில் அதிவியாத்தியுடையதாகும். சபக்ஷத்தில் இல்லாத ஏதுவென்றால்,

சபக்ஷத்தில் ஒருசிறிது மில்லாதிருப்பது என்ற பொருளுடையதாய்ப் பக்ஷவிபக்ஷங்களில் மாத்திரம் இருத்தலாகிய விருத்தவிலக்கணம் பொருத்தமுள்ளதாகும்.

(2) "பக்கவிபக்கைகதேசவிருத்தி" யாவது:—பக்ஷத்திலும், விபக்ஷத்துள் ஏகதேசத்திலும் மாத்திரம் உள்ள ஏதுவாம்

உதாரணம்:—நீர் குருத்துவமுடையதன்று, மதுரமுடையதாத லால் என்பதாம். இதில் மதுரமுடைமையாகிய ஏது, நீராகிய பக்கப்பொருளில் உள்ளதாய்க் குருத்துவமுடையதல்லாமையாகிய துணி பொருளுக்கு விபக்கமாகிய (குருத்துவமுடையதாகிய) பிருதிவிமுழுதும் வியாபியாமல், அதன் ஏகதேசமாகிய தேன், பாகுமுதலியவற்றில் வியாபித்துத் துணிபொருளின் மறுதலைப்பொருள் துணிந்து, துணி பொருளை விரோதித்தலால் விருத்தமாதல் காண்க.

இது துணிபொருளின் மறுதலைப்பொருள் துணியுமாறு:—

நீர் குருத்துவமுடையது; மதுரமுடைமையால்; யாதுயாது மதுரமுடையது அது அது குருத்துவமுடையது; கருப்புக்கட்டி போல என அந்துவயத்தாலும், யாதுயாது குருத்துவமுடையதன்று அது அது மதுரமுடையதன்று ஆகாயம்போலும் என வெதிரேகத்தாலும், மறுதலை துணிதல் காண்க. இது நியாயநூல்வல்லார்வழக்கு. ஆங்கிலப் பௌதிகநூல்வல்லார்க்கு நீரில் மதுரம் அப்பிரசித்தமாகை யால், அவர்க்கு இவ்வேது சொரூபாசித்தமாம்.

இனி அசித்த விவரணம் வருமாறு:- அசித்தமென்பதற்கு, சித்த மல்லாதது என்பது பொருளாம். சித்தம்:—என்டுப் பரனுக்குப் பிரமாணங்களால் முன்னமே சித்தித்திருப்பது. (அதாவது சாத்தியம் போலச் "சித்திக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படாது முன்னமே யுண்டென்று கண்டு தெளியப்பட்டதாயிருப்பதென்றபடி) இதன் இன்மையே அசித்தமென்னும் சொற்குப் பொருளாமென் றறியத் தக்கது. இங்ஙனம் பரனுல் அறியப்படாததொருபொருளை வேது வாகக்கூறின் அது அசித்தமென்னும் ஏதுப்போலியாம்.

சொரூபாசித்தமென்பது ஏதுவின்சொரூபம் பரனுக்கு யாண்டும் அறியப்படாதிருப்பினும், பிறிதோரிடத்தி லறியப்பட்டுப் பக்ஷத்தி

லறியப்படாதிருப்பினும் அவ்வேது சொரூபாசித்தமெனப்படும். சொரூபம் வடிவம். இங்கு "ஏதுவின்சொரூப" மென்பது (ராகுவின்தலை ராகுவின்வேறாகாது ராகுவேயாவதுபோல) ஏதுவின் வேறாகாது ஏதுவேயாயிற்று.

௧. சொரூபாசித்தமாவது:—பக்கத்திற் பரனுக்கு ஏதுவின் சொரூப மறியப்படாதிருப்பது. சொரூபம் - தன்வடிவு. உதாரணம், "சத்தம் அநித்தியம், காணப்படுகையால்;" என்றெழுதியிருப்பதே யமையும்.

௨. வியாத்தியதிகரணாசித்தமாவது:—ஏதுவின் சொரூபம் பக்ஷத்திற்சித்தித்திருப்பினும் அதன் அந்வய வெதிரேக வியாத்தி யறிதற்கு நிலைக்களமாகிய சபக்க விபக்கங்கள் சித்தியாதிருப்பது. (அதிகரணம்-நிலைக்களம்) இதற்கு உதாரணம் எல்லாம் அநித்தியம்; அறியப்படுதலால் என்பதாம். இங்குத் துணிபொருள், "அநித்தமாயிருத்தல்." இவ்வுதாரணத்துள், "எல்லாம்"என்பது ஐயுற்றுத் துணியும்பொருளுக் கிடமாகிய பக்கமாய்விட்டமையால் அவ்வெல்லாவற்றிலும் வேறாய்த் துணிந்தபொருளுக்கிடமாகிய அநித்தப்பொருள் பிறிதொன்றும் சித்திக்காமையால் அவ்வேதுவின் அந்வய வியாத்தி யறிதற் கோரிடமில்லாமையாலும், அவ்வாறே அவ்வெல்லாவற்றிலும் வேறுதற்கு விபக்கமாகிய நித்தப்பொருள் பிறிதொன்றும் சித்திக்காமையால் வெதிரேகவியாத்தியுணர்தற்கு இடமில்லாமையாலும் இது வியாத்தியதிகரணாசித்தமெனப்படும். இது தருக்கநூலுள் முடிவுபெறாமையென்னும் அநைகாந்திகவகையாக வழங்கப்படும். (இதனல், நல்லேதுவில் வியாத்தியுணரும் நிலைக்களமாகிய சபக்ஷ விபக்ஷங்கள் பரனுக்குப் பிரசித்தியுடையதாயிருக்கவேண்டுமென்பது குறிக்கப்பட்டது).

௩. விசேடியாசித்தமாவது விசேடண விசிட்டமாகச் சொல்லப்படும் ஏதுவசனத்தின் விசேடணப்பொருண்மட்டும் உள்ளதாக விசேடியப்பொருள் இல்லதா (அசித்தமா) யிருப்பது. இதற்குதாரணம்—வாயு காட்சிப்பொருள்; பரிசமுடைய உருவமுடைமையால் என்பதேயமையும்.

௪. விசேடணாசித்தமாவது விசேடணவிசிட்டமாகச்சொல்லப்படும் ஏதுவசனத்தின் விசேடியப்பொருண்மட்டும் உள்ளதாயிருக்க விசேடணப்பொருள் உள்ளதெனச் சித்திக்காது (அசித்தமாய்) இருப்பது. இதற்குதாரணம் "சத்தம் அநித்தியம்; காணப்படும்பொதுமையுடைமையால்" என்பதே யமையும்.

௫. பாகாசித்தமாவது சமுதாயப்படக்கூறும் ஏதுப்பொருளின் ஒருபகுதி அசித்தமாயிருப்பது. இதற்குதாரணம், காற்று ஆகாயத்தின்கூறு, உருவமின்மையும் சத்தமு முடைமையால் என்பதாம். இங்கு உருவமின்மையும் சத்தமுடைமையுமாகிய குணசமுதாயம் ஏதுவாம். இதனுள் ஒருபாகமாகிய சத்தமுடைமை ஆகாயத்திலல்லது வாயுவின்கட் சித்திக்காமையா லிது பாகாசித்தமாமெனக் கொள்க. இங்குப் பாகமென்றது "ஏதன்பாகம்" என்றவாறின்றுவழி, மேழே சொரூபாசித்தமுதலியவற்றுள் ஏதுவின்சொரூபம், ஏதுவின்விசேடணம் என அதிகாரப்பட்டுவருவது ஏதுவேயாதலால் ஏதுவின்பாகமெனக்கொள்ளுதலே முறைமையுடையதாகும். (பக்கத்தின் ஒருபாகத்தில் ஏது வியாப்பியமாயிருப்பது குற்றமாகாது.)

௬. ஆசிரயாசித்தமாவது:—ஏதுவின் ஆசிரயமாகிய பக்கப்பொருள் சித்தித்திராதது. உதாரணம்—"நிறம் திரவியமன்று; குணமாகலால்" எனப் பிறவிக்குருடனைநோக்கிக் கூறுவதாம். இங்குக் குணமாதலாகிய ஏதுவுக்கு ஆசிரயமாகக்கூறப்பட்ட பக்கப்பொருளாகிய "நிறம்" பிறவிக்குருடனுக்கு அசித்தமாயிருத்தல் காண்க.

௭. ஆசிரயைகதேசாசித்தமாவது ஏதுவின் ஆசிரயமாகிய பக்கப்பொருளின் ஒருபகுதி பிறனுக்கு அசித்தமாயிருப்பது. உதாரணம்- "ஐம்பெரும்பூதமும் திரவியங்களாம்; குணமுடைமையால்" எனப் புத்த சாருவாகரை நோக்கிக் கூறுவதாம். இங்கு, குணமுடைமைக்கு ஆசிரயமாகிய பக்கப்பொருள் ஐம்பெரும்பூதங்கள். அவற்றுள் ஏகதேசமாகிய ஆகாயம் புத்த சாருவாகருக்கு அசித்தமாகையால் அவர்க்கிது ஆசிரயைகதேசாசித்தமாயிற்று. பிறவெல்லாம் முன்பு வெளியிடப்பட்டவா றமையும்.

ரா. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

---

உ

# தொல்காப்பியரது சமயம்.

தமிழ்மொழிக்குரிய பேரிலக்கணம்வகுத்த தொல்காப்பியர் இன்ன சமயத்தைச் சார்ந்தவரென்று அறிதற்கு முயன்றுள்ளார் ஒருசிலரே யாவர். சற்றேறக்குறைய 30 வருடங்கட்கு முன்னர், டாக்டர் பர்ணல் என்பவர் தாம் எழுதிய 'ஐந்திரம் என்ற வடமொழி வியாகரணம்' என்னும் ஆராய்ச்சிநூலின்கண்ணே தொல்காப்பியர் பௌத்தராகவேனும் ஜைனராகவேனும் இருத்தல்வேண்டுமெனக் கூறிச்சென்றார். ஆனால் அவ்வாறு துணிதற்குத் தாம் கைக்கொண்ட நியாயங்கள் இன்னவென அவர் சுட்டுதல்தானும் செய்யாதொழிந்தார். 1914-ம் வருடத்தில் வெளிவந்த 'தொல்காப்பியர்சரிதவாராய்ச்சி' என்றவொரு சிறுநூலில் 'இவரது சமயம் சித்தாந்தசைவமேயாகும்' என்னு முடிபு காணப்படுகின்றது. இதற்குத் தரப்பட்டுள்ள நியாயங்களை இங்கே நான் விசாரிக்கப்புகவில்லை. சில நூல்களை நோக்கிவரும்போது எனக்குத்தோன்றின வொருவிஷயத்தைமட்டும் தமிழ்நூற்சரிதம்வல்லார் முன்பு சமர்ப்பிக்க எண்ணுகின்றேன்.

தொல்காப்பியரோ டொருசாலைமாணாக்கராகிய பனம்பாரனார் தாஞ்செய்த பாயிரத்துள் அத் தமிழ்ப் பெருஞ்செல்வரைப் 'பல்புகழ் நிறுத்த படிமையோன்' என்று சிறப்பித்துக் கூறுகிறார். 'படிமையோன்' என்னுஞ் சொல்வழக்கு யாண்டுரியது? இச்சொல்லுக்குத் 'தவவொழுக்கத்தினையுடையான்' என்று இளம்பூரணவடிகள் பொருள்கொண்டனர். இப்பொருள் எங்கே பெறப்பட்டது.

'படிமை' என்றசொல் எப்பாஷைக்குரியதெனவரைந்துணர்ந்து கொண்டாலன்றி மேலே தரப்பட்ட வினாக்களுக்கு முற்றிய விடை தருதல் கூடாது. தமிழ்ச்சொல்லாக அது தோன்றவில்லை. தமிழியல்போடொத்த சொல்லமைதியும் அதன்கட் காணுமாறில்லை.

தமிழ்ச்சொல்லன்றாயின் வேறு எம்மொழிக்குரியதாயிருத்தல் கூடும்? பண்டைக்காலத்தில் தமிழ்மொழியில்வந்து விரவப்பெற்ற பிறசொற்களுள்ளே பெரும்பாலன வடமொழிச்சொற்களாயுள்ளன.

ஆதலால் இச்சொல்லும் வடமொழிக்குரியதாதல்வேண்டுமென ஊகித்தல் தகும். ஆனால், பிறிதொருவிஷயம் இங்கே சிந்தனைசெய்யற்பாலது. வடமொழியினின்றும் பழந்தமிழ்நூல்களிலெடுத்து வழங்கப்பட்டசொற்கள், பெரும்பான்மையும் பிராகிருதவழி வந்துள்ளனவாகக் காணப்படுகின்றன. உதாரணமாகப் 'பாசி' 'ஊசி' (புறம்-229) முதலிய சொற்களை நோக்குக. இவை முறையே 'கிழக்கு' 'வடக்கு' என்று பொருள்படும் வடமொழிச்சொற்களின் பாகதச்சிதைவாம். வடமொழியினின்று சொற்களை நேரே யெடுத்தாளாது இவ்வாறு பாகதச்சிதைவுகளை யெடுத்துப் பிரயோகித்தற்குத் தக்க காரணமுமுண்டு. அந்நியபாஷைக்குரியசொல் லென்னுமுணர்ச்சி சிறிதும் உண்டாகாவண்ணம் தமிழ்மொழியின் ஒலியியல்போடு முற்றும்பொருந்துமாறு சொற்களைத் திரித்துக்கோடல் பண்டையோர் வழக்காயிருந்தது. இதற்குப் பிராகிருதம் அநுகூலமாய்நின்றது. வரவர இந்நியதியைத் தமிழ்மக்கள் நெகிழ்ந்துசெல்லவிட்டமையால் வடமொழியினின்று நேரேபெறப்பட்ட சொற்களின்தொகை நாளடைவிற் பெருகிவருவதாயிற்று. இக்காலத்தே வடமொழிச் சொற்களை யெடுத்தாளுதற்கண் நியதியொன்று வேண்டுமென நினைப்பாரும் அரியராயினர்.

ஆகவே, 'படிமை' என்றசொல்லைப் பிராகிருதத்திற் காணுவோமாயின் அது வியப்பிற்கிடமாகமாட்டாது. ஆனால் இச்சொல்லினது ரூபம் ஈற்றிற் சிறிது மாறுபடுதல் வேண்டுமென எளிதின் உணரலாம். பாலையென்பது 'பாலா' என்பதன் தமிழ்ரூபம்; மாலையென்பது 'மாலா' என்பதன் தமிழ்ரூபம். இவைபோன்றே படிமை என்பது 'படிமா' என்பதன் தமிழ்ரூபமாதல்வேண்டும்.

பிராகிருதத்தில், 'படிமா' என்றசொல் லுளதா? 'தவவொழுக்கம்' என்றபொருளைக் குறிக்கவல்லதா?

இக்கேள்விகளுக்கு வடமொழியுணர்ச்சியும் சமயநூலுணர்ச்சியும் நிரம்பியவர்களே விடையிறுக்க அருகராவர். 'படிமா' என்ற சொல்லுளதாக அறிந்தேன். அதற்குத் தவவொழுக்கமென்றபொருளிருப்பதாகத் தெரியவில்லை. என்னாலியன்றவரை பலநூல்களினுங் தேடினேன்; வடமொழிவல்லார் பலரிடத்தும் வைதிக சமயநூலு

ணர்ச்சியின்மிக்க பண்டிதர்பலரிடத்தும் கேட்டேன். எனக்கு விடை கிடைக்கவில்லை. கடைசியிற் குறிப்பிட்ட பண்டிதர்களுங்கூட எனக்கு விளக்கமாட்டாமையினாலே நமது வைதிகசமயநூல்களில் 'படிமா' என்ற பிராகிருதமேனும் அல்லது அதற்குச் சமமான வடமொழியேனும் 'தவவொழுக்கம்' என்றதனை யுணர்த்துவதாய்ப் பயின்றுவரவில்லை யென்பது தெளிந்துகொண்டேன்.

இவ்வாறிருக்க, சிலமாசங்களுக்குமுன் ஜைனசமய நூலொன்றை (The Heart of Jainiom by Mrs. Sinclair stevenson) யான் படிக்கநேர்ந்தது. அதன்கண் 'படிமா' என்ற ப்ராகிருதச்சொல் மேற்குறித்த பொருளையுணர்த்துவதாகக் காணப்பட்டது.

மோக்ஷமெய்துதற்குரிய மார்க்கத்தில், பதினான்கு நிலைகள் உள்ளனவாக ஜைனசமயத்தவர்கள் கருதுகின்றார்கள். இந்நிலைகளைக் குணஸ்தானகங்களென்று கூறுவர். இவற்றுள் முதலைந்து நிலைகளும் இல்லறத்தோர் துறவறத்தோ ரென்ற இருதிறத்தார்க்கும் உரியன. ஆறுமுதல் ஏனைநிலைகள் துறவறத்தோர்க்குமட்டு முரியன. இல்லறத்தில் நிற்பார், முதலைந்துநிலைகளும் கைவரப்பெற்றபின்னர், உண்மைத் தீர்த்தங்கரர்மாட்டும் உண்மையாசாரியர்மாட்டும் உண்மைநூலின் மாட்டும் துளங்காத பக்திவைத்து, பஞ்சஅதிசாரங்களையும் நீத்துப் பன்னிரண்டு விரதங்களையும் அனுஷ்டித்தல்வேண்டும். இங்ஙனநின்றோரினும் மிக்குச் சிறப்பெய்த விரும்பும் இல்லறத்தோர் பதினொரு தவவொழுக்கங்களை மேற்கொள்வர். இவ்வொழுக்கங்கள் 'படிமா' என்று பிராகிருதத்திற் பெயர் பெறும். 'தவம்' என்றசொல் இல்லறத்தார்க்கும் உரியதாதல் 'நற்றவஞ்செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கும் அஃதிடம்' என்ற (சீவகசிந்-77) மேற்கோள்நோக்கி யுணரலாகும்.

இதனால், 'படிமை' யென்பது ஜைனசமயவழக்குச்சொல்லென்பதும், அச்சொல் 'தவவொழுக்கம்' என்றதனை யுணர்த்துதல் அவ்வொரு சமயநூலின்கண்ணன்றிப் பிறசமயநூல்களில் இல்லையென்பதும் தெளியக்கிடக்கின்றன.

ஆகவே 'பல்புகழ்நிறுத்த படிமையோன்' என்று சிறப்பிக்கப் பெற்ற தொல்காப்பியனார் ஜைனசமயத்தவரா ரென்பதும், அதன்

கண் இல்லறநெறிநின்று சிறந்ததவவொழுக்கங்களை யனுஷ்டித்தவராவரென்பதும் உரைரலாகும்.

அகத்தியனாரது மாணாக்கருளொருவராகிய 'அவிநயர்' ஜைனரென்பது மகாமகோபாத்தியாய ஸ்ரீ சாமிநாத ஐயரவர்களால் அவர்களது மயிலைநாதருரைப்பதிப்பிற் காட்டப்பட்டுளது. ஆதலால் தொல்காப்பியரையும் ஜைனரெனக் கொள்வதில் யாதொருதடைமாற்றமும் உண்டாதற்கில்லை.

இம்முடிபினை வலியுறுத்துதற்குத் தொல்காப்பிய நூலின்கண்ணேயே பிறசான்றுகளும் உள. அவற்றைக்குறித்து வேறொருமுறை எழுதுவேன்.

S. வையாபுரிப்பிள்ளை,

திருவனந்தபுரம்.

---

## திருக்கச்சிநெறிக்காரைக்காட்டுச்

# சோழசிலாசாசனங்கள்.

(௯௩௮-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

(6) ...முன்பு.........தேவர்யாண்டு ௰௬-வது (யாண்டைக் குறிக்கும் எண்கள் ௰௩, ௰௩, ௩, ௰௮-இவ்வாறு இருந்தலினால் இவை 13 (௰௩) றையே குறிப்பிடுகின்றனவா அல்லது ௰௩, ௰௬, ௰௮ (13, 16, 18) இவைகளைக்-குறிக்கின்றனவாவென்று நன்குவிளங்கவில்லை.) ஜயங்கொண்டசோழமண்டலத்துக் காலியூர் கோட்டத்துக் காலியூர் நாட்டு ஓரிருக்கை ஊரோம் கையெழுத்து.

எயில்கோட்டத்து, நகரம் காஞ்சிபுரத்துத் திருக்காரைக்காடுடையார் மஹாதேவர்க்கு, அர்த்தயாமத்துக்குவேண்டும் நிவந்தத்துக்கு இர்ததானமடமுடைய மாதேவ ஹுத்தமநிதனை திருக்காரைக் காட்டுப் பெரியபிச்சன்தேவர் பண்டாரத்தில்வைத்தபொன் தன்ம கட்டளைக்கல்லால் துளைநிறைபொன் பதினைங்கழஞ்சும் (15 gold coins) காலியூர்கோட்டத்து, தனியூர், மதுராந்தகச்சருப்பேதிமங்

கலத்து மதுராந்தகச்சேரி வேற்புறத்துக் கண்ணக்கிரமன் வைத்த தன்மகட்டளைக்கல்லால் துளைநிறைபொன் பதினைங்கழஞ்சும் (15 gold coins). ஆகப் பொன் முப்பதின்கழஞ்சும் திருக்காரைக்காட்டு ஆதிதான............(8-வது வரி)...........தூணிபதக்கும் பொலிசை யாகவந்த நெல்லு.........இத்தேவர்க்குயாண்டு ௰௬ (16th year)வது மேல்படி ஊரோம் திருக்காரைக்காடுடையார் ஸ்ரீபண்டாரத்தில் இத் தாஸ சண்டேசுரர்பக்கல் இத்தேவற்கு (அர்த்தயாமத்திற்கு) வேண் டும் நிவந்தத்துக்கு துளை நிறை தன்மகட்டளைக்கல்லால் கொண்ட பொன் முப்பதின்கழஞ்சும் இப்பொன் முப்பதின்கழஞ்சுக்கும், பொன் கழஞ்சுக்கு அருமொழித்தேவன் மரக்காலால் நெல் இருகலனேமுக் குறுணி. (2-கலம், 3-குறுணி) ஆக நெற்செய்துவந்த நெல் அறுபத் தேழுகலனே தூணிபதக்கமு இந்நெல் நூற்றிருபத்திருகலனே தூணி பதக்கு இந்நெல் நூற்றிருபத்திருகலனே தூணிபத்க்கும், (112-கலம் 1-தூணி, 1-பதக்கு) காழும், பதரும், வாலும், பூழ்தியும் நீக்கிய உல கும், பாற்கூலியும், நாங்களேபட்டு திருக்காரைக்காட்டு மடமுடை யார் திருமுற்றத்தேகொடுவந்து இந்ததான மடமுடையார்வசம் இத் தேவர் ஸ்ரீபண்டாரத்து அளந்து தரவுகொள்வோமாகவும், முதற் பொன் கொள்கவென்று சொல்லப்பெறுதோமாகவும் இந்நெல் தண்ட வந்தார்க்கு மெய்கண்டு சோறுகொடுப்பதாகவும், இதற்றிறம்பில் தன் மாஸனம்முதலாகத் தான் வேண்டுகோவுக்கு நிசதம் இருகழஞ்சு பொன் நாளெடுத்து மன்றுபாடுபெறுவதாகவும் இம் மன்றுபாடு சென்றுநின்று மறுக்கவும் புள்ளிருத்துவிக்கவும் பெறுதோமாகவும், மன்றுபாடிறுத்து இந்நெல் நூற்றிருபத்திருகலனே தூணிபதக்கும் சந்திராதித்தவரை அளப்பதாகவும் இந்நெல்லுக்கு விரோதநின்றோம் கங்கையிடை குமரியிடைசெய்தார்செய்த பாவத்திற் படுவதாகவும் இப் பாவப்பட்டும் இந்நெல் சந்திராதித்தவரை ஆட்டாண்டுதோறும் கொடுவந்து அளப்பதாகவும் சிலாலேகை செய்துகொடுத்தோம் முற் சொல்லப்பட்ட காலியூர்கோட்டத்து காலியூர்நாட்டு ஓரிருக்கை ஊரோம்.

ஊரா சொல்ல வெழுதினேன் இவ்வூர் காணத்தான்.

9-வது வரி யாண்டு ௰௬ (16th year) ஜயங்கொண்டசோழமண் டலத்து நீவேளூர்நாட்டுத் திங்காடுபாகமாந் சோழதிவாகரநல்லூர் ஊரோம் கையெழுத்து,—

எயில்கோட்டத்து எயில்நாட்டுநகரம் காஞ்சிபுரத்து திருக்காரைக் காடுடையமஹாதேவதானமுடையார் மாதேவனுத்தமகிதனுகியதிருக் காரைக்காட்டுப் பெரியபிச்சன்கையால் இந்தேவர் ஸ்ரீபண்டாரத்து துளைநிறை தன்மகட்டளைக்கல்லால் கொண்டபொன் ஐம்பத்துமுக் கழஞ்சே ஆறுமஞ்சாடியும் ஐம்பாவ...இப்பொன் ஐம்பத்துமுக்கழஞ் சே ஆறுமஞ்சாடியும் ஐம்பாவம் (53-கழஞ்சு 6-மஞ்சாடி ஐம்பாவம்). (கழஞ்சு=12-பண எடைகொண்ட ஓர்நிறை, மஞ்சாடி=2-குன்றி மணிகொண்ட நிறை அல்லது வைரநிறை.)........................ ...........கொண்பரிசாவது:—பொன்கழஞ்சினுக்கு ஆண்டுவரை பொலிசை அருமொழித்தேவன்மரக்காலால் நெல் இருகலனொருமுக் குறுணியாக (2-கலம், 1-முக்குறுணி) நெற்செய்துவந்த நெல் நூற் றிருபதின்கலம் (120-கலம் நெல்) இந்நெல் நூற்றிருபதின்கலமும் திருக்காரைக்காட்டுமடமுடைய கையால் இத்தேவர்க்கு திருமெய்க் காவல் காப்பதாகக் கடவோமாகவும், திருமெய்க்காவல்சுட்டவந்த எவ கத்தேவேயெனப் பொறப்பட்டத்து நாங்கள் வருவதாகவும் இம்முதற் பொன் கொள்கவென்று சொல்லப்பெறுதோமாகவும் இதற்றிறம்பில் தன்மாசனமுதலாகத் தான்வேண்டுகோவுக்கு நிசதங் கழஞ்சுபொன் காளெடுத்து மன்றுபாடறுப்பதாகவும் இம்மன்றுப்பாடறுத்து இந் நெல் நூற்றிருபதின்கலமும் அருமொழித்தேவன்மரக்காலால் சந்தி ராதித்தவரை அளப்பதாகவும் ஆட்டாண்டுதோறும் திருக்காரைக் காட்டு மஹாதேவ்தானமுடையார் திருமுற்றத்தே அளந்து தரவு கொள்வோமாகவும். இத்தேவர்க்கு திருமெய்க்காவல் (Bodyguord or அங்கரக்ஷகன் மல்ஜி என்றும் வழங்குவதுண்டு) காக்கக்கடவோ மாகவும் இத்தன்மத்து விரோதஙின்றோம் கங்கையிடை குமரியிடை செய்தார்செய்த பாவத்திற் படுவதாகவும், இப்பாவப்பட்டும் திரு மெய்க்காவல் இரவும்..................

(இன்னும் வரும்.)

காஞ்சிபுரம், அ. நடேசசெட்டி,
85, செட்டித்தெரு,
சின்னக்காஞ்சிபுரம்.

# பரீக்ஷை.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் வருடமொருமுறை நடத்துவிக்கப்பட்டுவரும் தனித்தமிழ்ப்பரீக்ஷைக்குச் சென்ற இருமுறைகளிற் பிரவேசித்தமாணவர்தம்முள் இரண்டொருவர் சிறிது மனக்குறையுடையராகத் தெரியவரலின், பின்வருவனவற்றைப் பொதுநலன்கருதி எழுதலுற்றேன்.

மாணவர் இருவர் பரீக்ஷகர் ஒருவரின் வினாக்கள் மிகக் கடினமானவையென்றும், விடையெழுதுவதற்குக் கொடுக்கப்பட்ட நேரம் போதுமானதல்லவென்றும், ஏற்படுத்திய பாடபுத்தகங்களிற்கூறப்படாவிஷயங்கள் சில வினாக்களில் வந்தனவென்றும், நியமிக்கப்பட்ட புத்தகங்களிற் சில விலைகொடுத்தும் பிறவழியானும் பெற்றுக்கொள்ளக் கிடைக்கவில்லையென்றும், பிறவுமன்ன குறைகள்கூறி ஒருகடிதம் எனக்கனுப்பியிருந்தனர். மற்றொருமாணவர் தாம்பெற்ற அம்சம் எவ்வளவென்று வினவினர். இத்தகைக் கடிதங்களை எந்தப்பரீக்ஷகருக்காவது அனுப்புவதால் மாணவர் பெறக்கூடியபலன் யாதொன்றுமில்லை. பரீக்ஷகராவோர் சங்கத்தவரின் கணிப்பையும் முழுமனவிசுவாசத்தையும் உறுதியுறக்கொண்டு அவர்களால் இடப்பட்ட கட்டளையை நடுவுநிலைகோடாமல் நியாயநிலைநின்று பிறர் அறியாவண்ணம் அந்தரங்கத்திற் செய்துமுடிக்கவேண்டிய கடப்பாடுடையவராவர். பரீக்ஷை சம்பந்தமான தம்செயல் எதனையும் பிறர்அறிய வெளியிடுவதற்கு அவர்கள்பாற் சிறிதும் அதிகாரமேயில்லை. ஆதலின் மாணவர்கள் தமக்குள்ள முறையீடுகளையும், அறிய விரும்பிய விவரங்களைப் பற்றிய விண்ணப்பங்களெல்லாவற்றையும் சங்கக் காரியதரிசிமூலமாய்ச் சங்கத்தவர்க்கே யனுப்பவேண்டுமன்றிப் பரீக்ஷகர்க்கெழுதுவது தகாதெனவுணர்ந்து அப்பழக்கத்தை ஒழித்துவிடக்கடவர்.

பரீக்ஷை ஏற்படுத்தப்பட்ட நோக்கம் மாணவர்களின் விவேக சாதுரியங்களின் நிலைமையையும், அவர்கள் பயின்றுள்ள கல்வியின் திறமை முதலியனவற்றையும் ஒருவாறு ஆராய்ந்து மட்டிட்டறிதற்பொருட்டேயாம். பரீக்ஷையை நடத்துவிக்கும் சங்கத்தவர் மெய்த்

தீர்ப்புப்பெறக்கருதி நியாயஸ்தலமேறிய வாதியையும், பரீக்ஷிக்கப் படுமாணவர் பிரதிவாதியையும், பரீக்ஷகர் நியாயாதிபதியையும் ஒருவாறு ஒப்பர்.

மாணவருட் சிலர் வயதேறினவராயும், மற்றுஞ் சிலர் இளைஞராயும், வேறுசிலர் தீவிரபுத்தி, சொல்வன்மை, எழுத்துநலன் முதலிய சிறப்பினராயும், பிறசிலர் அவ்வகைய இயற்சிறப்பிலராயினுங் கல்விப்பயிற்சியிற் குறைவிலாத் தேர்ச்சியுடையராகவும், இன்னணம் பல திறப்பட்டிருப்பர். ஆகவே அவ்வெல்லாரும் ஒருமணிநேரத்துள் வினாக்கள் சிலவற்றிற் கிறுக்கும் விடைகளைக்கொண்டு அவர்களின் முழுத்திறமைகளையும் ஒருங்குணர்ந்து சீர்தூக்கி நிறுத்தளந்து கட்டுதல் வல்லேயின் மிக்க தொல்லையாம். ஆதலின், பரீக்ஷகர்மேற் பொறுத்துள்ளகட்மை மிகப் பாரித்து வருத்துமியல்பினதென்க.

சங்கமும், பரீக்ஷகரும், மாணவரும் நடந்துகொள்ளவேண்டிய வழிவகைகளைக் கற்பித்துக்கொடுக்கும் ஆற்றல் என்பால் இல்லை; அஃதோர்சமயம் உளவாயேற்படினும் அங்ஙனஞ் செய்தற்கு என் போலியர் துணிந்து முன்வரலும் முறைமையாகாது. ஆயினும், அம்முத்திறத்தாருங் கவனித்தற்குரியனவென்று என்மனத்தில் எழுந்த சில அபிப்பிராயங்களை இதன்கீழ்க் குறிக்கின்றேன். அவற்றுள் தகாதனவற்றை விலக்கித் தக்கனவிருப்பின் அநுசரித்தல் நலமாகும்.

## சங்கம்.

1. பரீக்ஷைவகுப்புகளுக்கு நியமிக்கும் பாடங்கள் ஒருபடிப்பட்ட பிரசுரமாய் எளிதில் பெற்றுக்கொள்ளக்கூடியபுத்தகங்களில் அடங்கியுள்ளனவாயிருத்தல்வேண்டும். அப்புத்தகங்கள் யாவர்பதிப்பு, எக்காலத்தின, எவ்விடத்து எந்த அச்சுக்கூடத்தில் எவ்விலைக்குப் பெறக்கூடியனவென்று முழுவிவரங்களும் பிரதம விஞ்ஞாபனத்தில் வெளியிடப்படவேண்டும். வியாசம் போன்ற பொதுவிஷயங்களைநீக்கி விசேட பாடங்களாக நியமிக்கப்படும் புத்தகங்களின் ஒவ்வோர் பிரதி இரவலாய்ப் பரீக்ஷகர்க்கு அனுப்பப்படவேண்டும்.

2. மூவகை வகுப்புப்பரீக்ஷைக்கும் செல்லற் குரியாரின் வயது எல்லைப்படுத்தப்படவேண்டும். பிரவேசவகுப்புக்கும் பாலபண்டித

வகுப்புக்கும் வயதெல்லை வேண்டாதெனிடினும் பண்டிதபரீக்ஷைக்குச் செல்வோர்வயது இருபத்தைந்திற் குறையாமல் நியமிக்கப்படவேண்டும்.

இளம்பருவத்திற்கற்கும் பாடம் சிலகாலவரையில், கற்ற அளவிலே தம்பித்துநின்று பின்னர் வயதின்வளர்ச்சியோடு வளர்ந்தேறி அபிவிர்த்தியாகும். தருமத்தைக்குறித்து ஒருவியாசம் இயன்றஅளவில் எழுதுகெனப் பத்துவயதுச் சிறுமி ஒருத்தியைக் கேட்குங்கால் அவள் பருவமடைதற்கஞ்சி அவ்வியாசத்தை ஐந்துவரியுள் முடிக்கலாம்; அவளினும் கல்வியிற்குறைந்த எட்டுவயதுச் சிறுவன் ஆண்டகைச் செருக்காற் பத்துவரியில் எழுதலாம்; இவ்விருவரும் இருபது முப்பதுவயதுடையராயபின்னர் அவ்வியாசத்தை மீட்டுமெழுதச் சொன்னால் அறிவுப் பெருக்கமும் அனுபவமும்போந்தவாறு பல துறைதோன்ற விரித்து ஐந்நூறுவரியில் எழுதவுங் கூடும். ஆகலின், பருவத்தாற் பலகலைப்பயிற்சியும் பழுத்துப் பதனாகாமுன்னர்ப் பண்டிதப்பட்டந் தாங்குதல் அமையாது.

3. மாணவர்கொள்கைகளும் அபிப்பிராயங்களும் ஆசாரபழக்கவழக்கங்களும் பலபேதப் பட்டிருத்தலின் அவர்கள் ஆணோ பெண்ணோ வென்றும், அவர்களின் சாதி, சமயம், வயதுமுதலியன இன்னவென்றும் பரீக்ஷகருக்கு அறியக் கொடுத்தல்வேண்டும். அங்ஙனஞ் செய்வதால் அம்சங்கொடுத்தல் இலகுவாகும்.

4. வினாக்கள்தயாரிப்பதற்கும், விடைகளைப் பரிசோதித்து மீட்டனுப்புவதற்கும் பரீக்ஷகருக்குக் கொடுபட்டுவரும்காலம் சிறிது கூட்டப்படவேண்டும்.

5. பிழைசெய்தல் யார்க்கு மியல்பு. ஒருவர் செய்யும் பிழையினிமித்தம் மற்றவர் பெறவேண்டிய பதவியைப் பெறாமல் இழத்தல் பரிதாபம். பரீக்ஷகர் ஒருவர் தற்செயலாய் மறந்தேனும் அயர்ந்தேனும் ஒருவிடைக்குக் கொடுக்கவேண்டிய அம்சத்தைக் குறைத்துப் பிழைத்திருக்கலாம். ஆதலின், பரீக்ஷகர் கொடுக்கும் அம்சங்களை ஒப்புக்கொண்டு தீர்மானஞ்செய்யுமுன் சங்கத்தவருள் தக்கார் மூவரை நியமித்து வினாவிடைகளோடு அம்சங்களை ஒப்பிட்டுப் பரிசோதனை செய்வித்து வேண்டிய திருத்தங்களைப் பண்ணிக்கொள்ளின் மாணவருரிமை பங்கப்படமாட்டாது.

## பரீக்ஷகர்.

1. பரீக்ஷகர் தமதுகடமையைப் பொறுமையுடன் செவ்வனே செய்துமுடித்தற்கேற்ற அவகாசம் வாய்க்கப்பெற்றிலராயின் ஆதியிலே உண்மையைக்கூறி இக்கருமத்திற் றலையிடாமல் விலகிநின்றுவிடல் மிகநன்று.

2. பரீக்ஷைகொடுக்கும் மாணவர்கள் யார்மக்களாயிருப்பினும் தமிழபிமானம் மேலிட்டுக் கல்வியில் உழைப்பவராதல்பற்றித் தம்மக்கள்போற் கருதியும், சிறுவரென்றெள்ளாமல் தம்மின் முதிர்வுறீஇப் பின்வருஞ் சந்ததியைப்புரக்க முன்னிலை கொள்ளுஞ் சத்திவித்துடைச் செல்வக்களஞ்சியங்களென நன்குமதித்தும் பாரபக்ஷமின்றி அன்புபர்மனத்தோடு அவர்களைஉற்சாகப்படுத்தல் பரீக்ஷகர்கடனாகும்

3. பரீக்ஷகர் தமது இளம்பருவத்திலே யாதேனும் பரீக்ஷைகொடுத்தற்குத் தாம் சென்றிருந்ததருணங்களில் தமக்குண்டாகியிருந்த அச்சமும் பதைப்பும் கலக்கமும் சித்திகோரிய ஆவலிப்பும் எத்துணையவென்பதை முற்றும் நினைந்து தம்மெதிர்வந்தமாணவச்சிறுர்மாட்டுக் கிருபையும் இரக்கமுமுடையராயிருத்தல்வேண்டும்.

பரீக்ஷையில் தோல்வியடையும் மாணவருட் பெரும்பாலார் மனமுறிவு வருந்திவருந்திச் சோர்வடைவர்; சகபாடிகளுடன்கூடிவிளையாட நாணுவர்; தந்தைதாயர் என்னினைப்பரோவென்று தயங்குவர்; பொருளுங் காலமும் வாளாகழிந்தனவேயென்று மயங்குவர்; நம்பியிருந்த சித்தி கைவரவில்லையேயென்று பரிதவிப்பர்; குயவனுடைய பலநாள்வேலையைத் தடியடிகாரன் கணப்பொழுதில் நாசமாக்கிவிடுதல்போல், பரீக்ஷகர் தம் பன்னிருமாசவுழைப்பையும் பாழாக்கினரேயென்று வருந்துவர். அன்னவர்பழி தம்மைச் சூழாவண்ணம் பரீக்ஷகர் காத்து நடந்துகொள்ளவேண்டியது. மாணவரொருவர்மேற் பரிவு எத்துணைப் பெரிதாயிருப்பினும் நடுவுநிலை தவறப்படாது.

4. வினாக்களைத் தயாரிக்கும்பொழுது அவற்றைக் கண்ணுறுஞ் சங்கத்தினரும் பிறரும் தமது புலமைத்திறமையைக் குறிக்கொண்டு பிரமிப்புற்று வியந்து மெச்சிக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்

தொடு அரியகடிய வினக்களை வரையாமல், மாணவர்பால் மறைந்து கிடக்கும் அறிவின்னிலையை வெளிப்படுத்தக்கூடிய சிறிய தெள்ளிய வினக்களை எழுதவேண்டும்.

5 அவ்வினக்கள் யாவும் நியமிக்கப்பட்ட பாடபுத்தகங்களுள் அடங்கியவைகளாகவும் பரீக்ஷகர் கூறற்கு விரும்பிய கருத்தை முட்டின்றி மயக்கற மாணவர்க்குத் தெரிக்குந் தெளிவுடையவைகளாகவும் இருத்தல்வேண்டும்.

நன்னூல் செய்தவர் பவணந்திமுனிவரென மாணவர்கற்றுளரோ வென்று அறியவிரும்பிய பரீக்ஷகர் நன்னூல்செய்தவர்யாவ ரென்று வினவுவராயின் அவ்வினவில் மயக்கற்கிடமுண்டு. நன்னூல் இயற்றினோர் நல்லிசைப்புலவராகிய சான்றோரென்று விடையிறுக்கப்படவுங் கூடும். நன்னூல் எனப் பெயரிய இலக்கணஞ் செய்தவர் யாவரென வினவப்படின் மயக்கத்திற் கிடனில்லை. அன்றியும், நன்னூற் சூத்திரங்களை ஆராயும்பொழுது இவ்விதியைப்பற்றித் தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ள சூத்திரமென்ன? தண்டியாசிரியர்கூற்றென்ன? என்று பலவாறு வரம்புகடந்து கடாவுதல் நியாயமாகாது. மாணவர் கற்றுள்ளன எவையென்று ஆராய்தலே மரபென்றுங் கல்லாதன எவையென்று தேடிக்காணமுயல்வது முறையன்றென்றுஞ் சிலர் கூறுப. கற்ற நூல்களினுந் தலையாயவிசேடப் பொருள்களை ஆராய்தலன்றி மூலைமுடுக்குகளிற் கரந்துகிடக்கும் காத்திரமற்ற குறிப்புகளைக் கணித்துக்கேட்டல் தகுதியன்று.

6. விடை இறுத்தற்குக் கொடுக்கப்படும் நேரத்தை விசேடமாகக் கவனித்து வினத்தொகையைத் தக்கபடி சுருக்கிக்கொள்ள வேண்டும். வினக்கள் யாவும் அவற்றை எழுதுகின்ற பரீக்ஷகருக்கு மிகவும் எளியனவாய்ச் சாதனப்பட்டவைகளாய் விரைவில் விடையிறுபடத்தக்கனவாயிருக்கலாம். மாணவர்க்கு அவைகள் கடினமாக மயங்கித்தோன்றவுங் கூடும். அவர்கள் வினக்களைப் பன்முறை படித்து அவற்றின் மெய்ப்பொருள்கண்டு தக்கவிடைகளைத் தீர்க்காலோசனைசெய்து பிழையற வரிசைப்படுத்தி எழுதவேண்டியவர்களாகலின் அவர்களுக்கு மிக்கநேரஞ் செலவாகும். ஆதலின், பரீக்ஷகர் ஒரு மணி நேரத்துள் விடை எழுதக்கூடிய வினக்களுக்கு மாணவர்க்குக், குறைந்தது நான்குமணி நேரமாவது கொடுபடவேண்டும்.

மட்டுக்குமிஞ்சித் தேவைக்கும்மீறி வினாக்களை வன்மைகொளச் செய்தல் அனாவசியகமாகும். வெண்பா இயற்றுமுறை ஒருவன் கற்றனனோவென்று அறியவேண்டின் யாதேனும் ஒருவிஷயத்தின்பேரில் ஒரு வெண்பாவை இயற்றும்படி கேட்கலாம். மேலும் அவனது திறமையை ஊன்றி ஆராயவேண்டுமாயின், அரியவிஷயமொன்றைத் தாமாக நியமித்து அதன்பேரில் இன்னபொருள் அமைவர ஒருவெண்பாச் சொல்லென்று கேட்பின், போதுமாயிருக்கும். அங்ஙனஞ் செய்யாமல் "திருப்பாற்கடலையுஞ் சேடனையுஞ்சிறப்பித்து ஒரு நேரிசை வெண்பா வெண்டிரை எனத் தொடங்கி விழைந்து என முடிய, ஆடு மாடு என்னுஞ் சொற்கள் மிருகங்களைக்குறியாமல் வேறு பொருளில் விரவிவர, ஐந்துசீர் ஈரசைச்சீராகவும் பத்துச்சீர் மூவசைச்சீராகவும் அமைய, ஒற்றுவிரவாமற் பாடுக" எனப் பணிப்பின், ஐயகோ! இளம்மாணவர்கள் என்னதான் செய்குவர்!

7. மாணவர்களின் விடைப்பத்திரங்களைப் பரிசோதனை செய்யும்பொழுது,

"காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கட்
குற்றமுந் தோன்றாக் கெடும்"

என்னும் ஆன்றோர் வாக்கை மறந்துவிடப்படாது. விடைகளைப் பொதுநோக்கிற் பார்வைசெய்துசெல்லாமல் இருமுறை மும்முறை செவ்விதின் ஆராய்ந்து உரிய அம்சங்களைக் கிரமமாய்க்கொடுக்க வேண்டும். கொடுத்தபின் அவ்வம்சங்களைத் திரட்டி மொத்தமிடுங்கால், சித்திக்கேற்ற அம்சத்தொகையில் ஒன்றிரண்டு தாழுமாயின் மீட்டுமொருமுறை விடைகளை ஆராய்ந்து, அம்சத்தை ஏற்றக்கூடிய விடைகளில் ஏற்றித் தொகையை நிறைத்துக்கொள்ளல் நன்று. பாரபக்ஷங்காட்டாமல் மாணவர்களை எவ்வாற்றானும் ஊக்கப்படுத்தலே நலமாகுமன்றித் தாக்கி ஒறுத்தல் தகைமையாகாது.

## மாணவர்.

1. மாணவர், பரீக்ஷகரைத் தங்கள் திறமைகளை ஆராய்ந்து அரங்கேற்றிப் பரிசுதருவிக்கும் உபகாரிகளென்று அன்பிற்கருதாமல் தம்மைக் கொல்லவரும் கூற்றுவனில் அஞ்சி வெறுத்தல் அதர்மமாகும்,

2. பரீக்ஷைத்தலத்தைச் சென்றடையும்பொழுது உள்ளங் கலங்கி உடல்பதறிப் பேதுறாமல் இயன்றவளவுசெய்குவல், வெற்றியுந் தோல்வியும் இறைவனருட்படி ஆகுக என்று சித்தசமாதானஞ் செய்து பொறுமையுற்றிருக்கவேண்டும்.

3. விடையெழுதும்படி தரப்படும் வினாப்பத்திரத்தை எழுதத் தொடங்குமுன் செவ்வையாக அதனைப் படித்து இயன்றவளவு விளங்கிக்கொண்டு எளிதில் வரையக்கூடிய விடைகளை முன்னர் எழுதவேண்டும். எழுத்துக்களைக் கூட்டெழுத்தாகத் தொடுத்தெழுதாமற் பிரித்து இயன்றவளவு தெளிவாகவும் சிறப்பாகவும் எழுதவேண்டும்.

4. ஒரு வினாவைப் பரீக்ஷகர் கடினப்படுத்தியிருந்தால், அப்படிச் செய்ததற்குப் போதிய நியாயமிருக்கலாமென்று நம்பி இயன்ற விடை எழுதுவதன்றிப் பரீக்ஷகரைத் தாக்கிக் குறிப்புகள் ஒன்றும் எழுதப்படாது.

5. மைவிழுத்தல், கீறுதல், தேய்த்துரைத்தழித்தல் ஆதிய குற்றங்களைத் தவிர்த்துவிடவேண்டும். ஒரு வாக்கியம் பிழைபடுமாயின் நடுவழி அழுந்தியோடும் ஒரு தடித்தவரையை அவ்வாக்கியத்தின்மேலுறக்கீறித் திருத்தத்தைத் தொடுத்தெழுத இடமில்லாவிடின் மேலே எழுதவேண்டும்.

6. நேரஞ்செல்வதை அடிக்கடி கவனித்துப் பத்துநிமிடமிருக்குமளவில் எழுதுதலை நிறுத்திக்கொண்டு, எழுதிமுடிந்த விடைகளை முதல் தொடங்கிக் கவனமாய் வாசித்து வேண்டிய திருத்தங்களைச்செய்து பூர்த்தியாக்கவேண்டும். இலக்கம், பெயர், தலம், முதலிய விவரங்கள்யாவையும் வேண்டிய முறைப்படி தெளிவாகவும் திருத்தமாகவும் எழுதிக்கொள்ளவேண்டும். அவசரங்கொண்டு அலங்கோலமாய் ஐந்துவிடை எழுதுவதினும், அமைதியுடன் பிழையின்றிச் சிறப்பாக இரண்டுவிடை எழுதல் நலமாம்.

7. விளங்கா வினாக்களை விளங்கியவர்போல் நடித்துப் போலிவிடைகளைக்கொடுத்துப் பேதைமைப்பிழம்பைப் பிளந்து காட்டப்படாது.

ச. பூபாலபிள்ளை.

உ

# ஐயவினாத்தொடர்.

தண்டமிழ்த் தாய்க்குத் தொண்டனும் பழைய
அடியனேன் முடிக்கோர் அணியா விலகத்
திருவடி தந்தருள் செந்தமிழ்ப் புலவீர்!

(௧) பதின்மூன்றாம்புறப்பாட்டிலே அதன் உரையாசிரியராலே ஈற்றிலே எழுதப்பெற்றுள்ள 'பெருநற்கிள்ளிகளிறு கையிகந்து பகையகத்துப்புகுந்தமையின் அவற்குத் தீங்குறுமென்று அஞ்சி வாழ்த்தினமையால், இது வாழ்த்தியலாயிற்று, இவற்குத் தீங்குறின் நமக்குத் தீங்குறுமென்னுங் கருத்தால் நோயிலனாகிப்பெயர்க வென்றாராயின், வாழ்த்தியலாகாது; துறையுடையானது பாட்டெனவுணர்க." என்ற பகுதியிலே தடித்த எழுத்திலுள்ள அவற்கு, இவற்கு என்றவற்றால் முறையே சுட்டப்படுபவர் எவர் ?

(௨) இருநூற்றொன்றாம் புறப்பாட்டிற்கு அதன் உரையாசிரியர் முடிபுகாட்டியிருக்கும் முறைமைக்கும் பதின்மூன்றாம்பாட்டில் முடிபுகாட்டியிருக்கும் முறைமைக்கும் வேறுபாடுகள் உண்டா ?

(௩) இறையனாரகப்பொருள் (௧௬) உரையிலே தமிழ்கெழு மூவேந்தர்க்குரிய விழாக்களைத் தெரிப்பதுபோல 'மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப் பங்குனியுத்திரமே, கருவூர் உள்ளிவிழாவே' என்றபகுதி காணப்படுகின்றது. அகநானூற்றிலே "கொங்கர் மணியரையாத்துமறுகினூடு, உள்ளிவிழவினன்ன" (௩௬௮) என்று வருகின்றது. இதனால் 'உள்ளிவிழா' கொங்கரது என்பது பெறப்படுகின்றது. அங்ஙனமாயின் முற்கூறிய மூன்றுவிழாக்களையும் மூவேந்தர்களை ஒட்டி வந்தனவாகக் கருதாது தமிழ்நாட்டுச் சிறந்துவிளங்கிய அவ்விழாக்களை அவை நடந்த ஊர்களோடுசேர்த்து வழங்கிவந்தனர் என்று கொள்வது நேராகலாமா ?

(௪) பெரியபுராணத்திலே 'எற்றாய்வேகம்' (அப்பூதி. ௨௭) என்ற பகுதி பயின்றுவருகின்றது. இப்பகுதிக்கு எங்ஙனம் பொருள் கொள்வது ?

ஊ., சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்,

உ

# தனிநிலைச்செய்யுட்கோவை.

(௩௨௫-ஆம் பக்கத் தொடர்ச்சி)

29. நூலமை யியற்கை நுவல்சால் சிறப்பிற்
பால்வகை யறிந்த பல்லோர் பழிச்சு
நுண்மாண் வினைபூ ணேக்குடை மனைநன்
கியற்றினோ னதனிடை யிரீஇ யொருவனைப்
போற்றா தொறுக்கும் புலைமகன் போல
யாக்கைக் கினிய யாவையும் போற்றி
யின்னுயிர்க் குறுதி யென்றும் போற்றார்
காக்கை முதல தம்மினக் கவினுக்
குவத்தலி னுங்குவந் தயற்குறு மெழிற்கு
முவர்த்தாங் குவர்த்து முலகினைக்
கலக்கித் தந்நிலை களைந்தொழி குநரே.

30. தம்பொரு ளுதவித் தண்கடல் சூழ்ந்த
விம்பர்வாழ் மன்பதைக் கியல்வினை முற்றுறத்
தம்முட லறிவெலாந் தரீஇப்பெறு சிறுபொருள்
கொடைமுறை யன்றிப் பெறுமுறை யன்றெனு
மன்னவர் கொடைஞர் மாண்டொழி லாள
ரென்றிவர் தமக்கெலா மீதலவ் வவர்செயல்
பொன்ற வறுக்கு மாதலிற் புரைபெறு
நின்றநெஞ் சந்தணர் நீடுகுலக் காப்பிற்
செயனுல கெல்லாஞ் செயிருறச் செய்யு
மாதலி னவர்க்கெலா மளித்தன் முறையெனு
வுலகந் தாங்கிய வுயர்குலத் தவர்தம்
மரபுவரு குநரெலா மாணா ரேனுஞ்
செய்ந்நன்றி யறிதல் சிறந்த தொன்றாதலின்
மெய்யொடவ் வந்தணர் வியன்மர பளித்தல்
பழியொழி யொண்ணலச் செம்பயன் றருமெனச்
சிறுபொரு ளேனுந் தமக்கெனச் சேமியார்
மறைநெறி வழுவா மாண்பினர் மறந்து
சிறுதொழி லொரோவழிச் செயிற்செயி ரன்றெனும்
பிறர்தமக் கங்ஙனம் பேணல்சா லாதெனு
நலஞ்செய் சான்றோர் நவினெறி நூன்முறைச்
செம்பொரு டெளியார் சிலரே
வெம்பியழிந் தொள்ளிய வினைதபுக் குநரே.

31.* இரும்புகொடுத் தர்நிறைப் பொன்பெறு ரில்லை
விரும்புமணி நீறு முதலமேற் பொருளெனக்
கொண்டுமிகு பொன்னைக் கொடுக்குந ருமில்லை
இன்னண மியல்குவ ரேனைக் கொள்கையர்
தமருந் தாமுந் தகையில் பழிபுரி
வினையியல் புணர்ந்தும் வெளிப் பட்டாங்கு
நாணின்றி யொருவனை நலிஇனு கலிகுவர்
பிறர்வினை யிகழ்தலிற் பேணுந்தம செயல்
பிறரிகழ்வு பெறுதலும் பேணாது பிதற்றுவர்
ஒருதொடர்ப் பலபொரு ளற்றற் றேயா
வுரைபல வுரைத்தாங் குணரா நிலைமையர்
காரண மின்றிப் பற்பல கடாவுவர்
பிறர்நிலை பேணார் பற்பல பிதற்றி
யுறுதுயின் முதல வுழக்கிக் கலக்குவர்
பிறரொடை தமக்குப் பெருந்துன் பெனினு
மரிசாதி வேட்டு மலர்த்துவர் முகத்தைத்
தாய்மொழி பயிலார் தாய்மொழிப் புலமை
யாய்தவர்க் கன்புசெய் தாவன புரியார்
மாய்தகை வினைசெய் மாக்கட் குதவுவர்
தம்மரசு வேட்டுத் தாஅய்ப்பல கூறவர்
குறிப்புணர் இல்லார் கூடியர் வுரைத்து
வெறுப்புறீஇ நலனற்று வீகுநர் நலிந்து
கொடியுருப் புணரா நோதக் குடல்வாழ்வு
கல்வினு நிலையாக் கருதிவீண் முயல்குவர்
மண்ணிடை யியலிவை மதித்தீண்
டெண்ணுற் றேகா திறந்தவர் பலரே.

32. எழுதி யாவரு மெண்ணியாங்கு முறையே
பயிலற் குரிய பான்மைய வாகின்
மனத்திடை வளர்வொரீஇ பேட்டிடை வளர்ந்து
புறநாட் டவர்தம் மொழிபுகுந் தொன்றி
யறவே யழியு நான்மறை யாதலி
னந்தணர் தமக்கே யாக்கினர் சிறப்பென
அந்தணு னன்றே யிற்றைஞான் றவருங்
காதிடைக் கேட்கவுங் கண்ணிற் காணவும்
வாயிடை வழங்கவும் வாய்ப்புடைத் தாயின
வெனக் கொடு நட்புற் றிணைந்து
மனக்கச டற்றுநாம் வாழ்வது முறையே.

33. தட்ப வெப்பந் தகுதியொடு நாடு
வயது தொழினிலை வாய்ந்த விவற்றிற்
கேன்ற வல்சியு மினிதாக்கு மாறு
மான்ற வளவும் பிறவு மளித்தனர்
தோன்று பிணிக்கு மருந்துந் துணைமை
சான்ற வுடைக்கைக் குரியன பட்டும்
பருத்தியுந் தந்தநம் வருத்தம் பாற்றின
ரிருக்கையும் வாழ்க்கைக் கின்றியமை யில்லாத்
திருத்தம் பயின்ற சிர்சா னெறியு
முன்னம் புரக்கு மியவுள தன்மையு
மின்னவும் பிறவு மினிதீந் தியன்றன
ரிவ்வாறுகவு மிற்றைஞான் றவருட்
சிலரே,

அவரினு நட்ப மார்ந்தன ரெனக்கொடு
முத்தை தொட்டு முறைவரூஉ மவ்வெலாந்
தத்தம் விருப்பிற் றபுத்துறழ் குநரே
இவரே,

ஒல்காப் பெருமைத் தொல்காப்பியமும்
வள்ளுவர் வழங்கிய தெள்ளுதமிழப் புலமுஞ்
சுவைகனிந் தூற்று நவையில் பண்டைத்
தண்டமிழ்ப் பனுவலுந் தருஞ்சார் பினர்சொல்
ஆறுகடை யிட்ட பத்துவகைக் கூடல்
முதல வுணவும் பிறவு முறையே
மாற்றிப் பிறவழங்கு மாற்றல ரேயோ
வாதலி னின்னோ ராட்சியுட் படாம
லுடற்கருவி யமைப்பு முயர்வரும் வியப்பு
முயர்போ மயக்கு மொன்றிய வைம்பெரும்
பூதத் தியற்கையும் புந்திகொடு தரீஇப்
பழக்க வழக்கம் பாற்பட வணிந்துநல்
லின்பமுற் றோங்கி யிலகுத
லன்புற் றமர்வழக் காறு கும்மே.

34. மடவோர் தன்னினும் வார்கட லுலகி
னுடவர் தம்மை மேம்படக் கோடல்
பண்டைநா டொட்டுப் பார்க்கெலா மியற்கை
யிவ்வே மான நான்மறை யியம்பு

மிம்பர்வாழ் பற்பல வியவுட் கொள்கை
நாட்டவர் இசினோர் நங்கைய ரலரே
யாடவர் தமரையு மடவோர் தமரையு
முறையே கருவுறீஇ முற்றுநரு மிலரே
யறைபணி யாற்று மடிச்சிய ரேய்ப்ப
மடவோ ரன்றே மற்றிரு வோரையுந்
தம்மகவு வருந்தித் தருகுந ரம்மா
வாஉ மேலு மகஉ கீழு
நாடுதல் விழைதல் ஞாலத் துயிர்க்கெலாங்
கூடுமுறை யாதலைக் குறித்தில ரேயோ
இவற்றால்,
மங்கையர் முதலா மாநிலர்
தங்குவ மைந்தர் தமக்கா கியவே.

35. பெறலரு மணியைப் பெற்றோன் பேழையு
ணிறைகாப் பிட்டு நேர்மைபுரி இலனாய்ச்
செல்லுழி யெல்லாஞ் செல்லுவன் கொல்லோ
அஃதேய்ப்பப்,
பெண்டிரை நம்மனோர் பேணிவரு குநரே
யொண்டொடி யவரை யொரீஇயோன் றுனுற்றல்
கண்டவ ருளரோ நம்வயி னிம்மையொடு
மறுமைபெறு வினைக்கெலா மாநீர் வார்த்தே
யறமுத லாற்ற லறியா ரேயோ
வுறுமுயிர் வாழ்வுக் குரியவுட லோம்பற்
கன்னவர் துணையே யுறுமுத லவற்றிற்
இன்றியமை இலரா யிருத்தலன் பன்றோ
வேட்கை கருதிப் பிறர்வேட் பதுபோல்
வேட்கில ருயிர்மேம் பாடொன்று கருதி
வேட்குநர் சான்றோர் வினைநலன் பலவே
யிவ்வா றாகவு மேலைநாட் டவர்த
மொவ்வா நெருந லொழுக்குக் குருகி
யொழுகலைத் தந்தோ வொழிகுந
ரழுகலறி வார்ந்த வறங்கடை யோரே.

36. மனநிலை யிருத்தலும் வளம்பல பெருக்கலுந்
தானின் றமையா தலகெனக் கொளீஇ

மயிற்குர லெழீஇ நெய்யெரி மரீஇப்
பொறிவழி யீர்க்கும் புனையினை நிரைகால்
வண்டியி னமர்ந்து தெருவிரு மருங்கிற்
கீழ்ச்சாய் சாரத் திளர்பைம் புல்லெலாந்
தொடர்செய் நூலின் றோற்றம் போன்றும்
புடைநிலை மரனெலாம் போதல் போன்றும்
பல்லாறு போக்கிப் பலப்பல பகர்தலும்
வென்றன மென்று வீறுதலு மன்றோ
தோற்றன மென்று துன்புற் றுழிதலு
மறிந்தன மென்று மறிந்தில மென்று
மின்ப துன்பத் திடைப்பட் டுழல்வதா
னென்னும் பயக்கா தியைவ பொன்றுது
பொன்னிகர் சான்றோர் புகல்பலர் போயுங்
கருப்பே பிணியே கடும்பெறுஞ் செருவே
யென்றிவை யளப்பில விம்பர்மூற் றுழித்து
மென்னா கியதே யென்னா கியதே

ஆதலி,

னின்னோ ரன்ன வியற்கையறி கில்லா
வின்னா மனனே பலசுமந் தினைகுதி
நின்னா னுலகி னிலைப்பு மழிப்புந்
தன்னா தண்மை பொய்யுரை யன்றே
நீயழிந் தக்கா னிலவுநர்
போயழிந் தொழிகுவர் புதுமைமிக வுடைத்தே.

37. உற்றுழி முறீஇ யுதவிய தானே
களிம்பூறு கட்டை காண மேலுறூஉம்
பொற்றகடு விட்டுப் போகா தியாத்த
நூலிலகு கடகக் கையின னுவல்சால்
கைவந்த தன்னற் கவின்பெறு வினைஞன்
பன்னாண் முயற்சியைப் பாழ்செய் புரையதூஉ
மெத்திறத் தியாப்பினு மிடர்கொளப் புரிவதூஉஞ்
செவ்வா னத்திடைட் வெள்ளுடுச் செறிவெனப்
புள்ளியிடை யிட்டு நான்மருங்கு கருத்த
கூடற்செங் கூறைய ளரிதிற் கோளுறு
வருநிலை கருதி வாய்க்கொளாத் துயரினள்
சுண்ணர் நீட்டிய மட்சுவ ராண்டுபல

நண்ணியடி யுப்புண்டு நடந்தா லென்னக்
கந்தையடிப் புறாமறை கதுவுபழம் புற்பாய்
யாத்த தட்டியுடை யில்லோண் முகப்புவரு
கிழலொடு நிலவளாய் நிலாவுறு மண்ணை
மழைப்பெயல் வாய்ந்தென்று மகிழ்வுறீஇ யெடுத்து
நாண்கொண்டு வீசு நல்லோ ளென்னுயிர்
வைப்போன் வகைகண் டாற்றுது பொள்ளெனப்
புலந்தரு காமெறி மகிழ்கொடு போக்கி
நலந்தரு பாண்டித் துரைமினை நயந்தன
னிலந்தரு திருமுத னிறைந்த
குலந்தரு கொள்கை கொண்டனை யெனவே.

(தொடரும்.)

## தனிநிலைச்செய்யுட்கோவைப் பிழைதிருத்தம்.

(செந்தமிழ் 18-ஆம் தொகுதி 95-ஆம் பக்கம் முதல்)

| பக்கம். | பா. எண். | பா. வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 95 | 9 | 9 | தாற்றய் | தாற்றப் |
| ,, | ,, | 15 | பண்ணிடைத் | மண்ணிடைத் |
| 142 | ,, | ,, | படுத்தித | படுத்தித் |
| 143 | 13 | 3 | யாழந்து | யாழ்ந்து |
| 144 | 14 | 8 | லழிவது | லழிவுறு |
| ,, | ,, | 28 | பழுஉக் | படுஉக் |
| 288 | 17 | 13 | ஞெண்பிலர் | ஞெண்பினர் |
| ,, | ,, | 42 | அஃதேய்பப | அஃதேய்ப்ப |
| 318 | 18 | 2 | வாழ்க்கைக | வாழ்க்கைக் |
| 320 | 20 | 1 | வளர்பொரு | வான்பொரு |
| | | | ளடையுநர் | ளடையுநர்வாழ்க்கை |
| | | | வாழ்க்கை | மழையிடைக் |
| 320 | 20 | 4 | செய்கைத் | செய்கையத் |
| 321 | 22 | 26 | வெழிவிரு | வெழிவிள |
| 324 | 27 | 17 | பாரரன் | ப்ராரண் |

எஸ். வயிரமுத்து.